**தலைப்பு 323 - சட்ட விவகார திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1..1 அபிப்பிராயம்

தலைப்பு 323 - சட்ட விவகார திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட விவகார திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்ட விவகார திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவ திர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை | | |
| (அ) | நிதிப் பிரமாணம் 103(1), 104, 109(1) மற்றும் 109(2) | 216,155 | 2021 ஆம் ஆண்டின் போது காணாமல் போன ஒரு கணனி சம்பந்தமாக விசாரணைகளை முடிவுறுத்ததி முழுமையான அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு 2024 செப்தெம்பர் 02 ஆந் திகதி | நி.பி 104(1) (அ) இன் பிரகாரம் விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூற வேண்டியவர்களை நிர்ணயிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசின் பிரகாரம் பொலிஸ் புலனாய்விற்கு இணங்க மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பொலிஸ் விசாரணையின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட காரணிகள் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 03 ஆண்டுகளுக்கு அண்மித்தகாலம் கடந்திருந்தும் இன்னும் நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்தது. | வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 891(1) | - | பிணைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | அது சம்பந்தமாக எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | -மேற்படி- |
| (இ) | நிதிப்பிரமாணம் 315 | - | 2023 ஆம் ஆண்டின் போது உரிய பதவிகளில் சேவையாற்றி பிணை வைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | அது சம்பந்தமாக எதிர்காலத்தில் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற 24 அதிகாரச் சட்ட வரைபுகளுக்கு பந்தியில் 2021 மற்றும் 2022 | சட்டத்தினை அங்கீகரித்தலானது கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் | திட்டமிட்டவாறு வருடாந்த செயற்பாடுகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். |

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பின்வரும் 09 அதிகாரச் சட்டங்களுக்கு 2024 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

- 1951 இன் 38 ஆம் இலக்க லோஹோர் சீமாட்டி கடன் நிதிய அதிகாரச் சட்டம்
- கொழும்பு பங்கு பரிமாற்றத்தினை பன்முகப்படுத்துதல் அதிகாரச் சட்டம்
- 2009 இன் 23 ஆம் இலக்க இலங்கை சான்றுபடுத்திய முகாமைத்துவ கணக்காளர் நிறுவன அதிகாரச் சட்டம்.
- 2006 இன் 05 ஆம் இலக்க பண மோசடியை தவிர்த்தல் சட்டத்திற்கான திருத்தம்
- 2006 இன் 06 ஆம் இலக்க பணக்கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் அதிகாரச்சட்டத்திற்கான திருத்தம்
- 2005 இன் 25 ஆம் இலக்க பயங்கரவாத்திற்கு நிதி வழங்குவதனை ஒடுக்கும் ஒழங்குபடுத்துதல் சட்டத்திற்கான திருத்தம்
- 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலினை முறைமைப்படுத்தும் அதிகாரச் சட்டத்திற்கான திருத்தம்
- 1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டத்தின் வரைபு
- 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டத்திற்கான திருத்தம்

மேற்கொள்கின்ற மிகவும் சிக்கலான நடைமுறையாவதுடன் சட்ட வரைபினை அங்கீகரிப்பதற்கு பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைப்பதற்கு முன்னர் உரிய விடயங்களை தொடர்புபட்ட நிறுவனங்களுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் நடாத்தப்படுவதுடன் மேற்கூறிய நிறுவனங்களின் தீர்மானத்தின் பிரகாரம் அவற்றினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் போது தாமதங்கள் ஏற்படுதல் எங்கள் நிறுவனத்தின் பொறுப்பு அல்ல என சுட்டிக்காட்டுகிறேன்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கலின் காரணமாக பொருளாதார நிலைமையை அதிகரிக்கச் செய்வதற்கு தேவைப்படுகின்ற உள்நாட்டு கடனை மீள்கட்டமைத்தல் நடைமுறைக்கு உரியதான சட்ட வரைபுகளை அங்கீகரித்தல் பாராளுமன்றத்தின் முன்னுரிமை செயற்படானதுடன் அது அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் இடம்பெற்றுள்ளது.

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரித்த 22 பதவிகளில் 06 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதடன் வெற்றிடங்களில் 04 பதவிகளும் சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகளாகும். அவற்றில் பணிப்பாளர் நாயகம் பதவியானது 2015 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவியானது 2021 சனவரி மாதத்திலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளரின் 01 பதவி 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. அந்த வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணிப்பாளர் நாயகம் பதவியானது அமைச்சரவையினால் நியமிக்கப்பட வேண்டிய ஒரு பதவியாகும். மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடமை பார்த்தலானது பணிப்பாளர் (சட்டம்) பதவியினால் மேற்கொள்ளப்படுகின்றது. | தேவைப்பாட்டின் பிரகாரம் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |